# மாயவலை



பா.ராகவன்

73



உலகின் அதிபயங்கரவாதிகள் என்று ஐக்கிய நாடுகள் அமைப்பு அளித்துள்ள பட்டியலில்,

முப்பத்தைந்தாவது இடத்தில் இருப்பவர் அபூபக்கர் பஷீர். ஆனால், அவரது ஜமா இஸ்லாமியா இருப்பது முதல் பத்து இடங்களுக்குள். தென் கிழக்காசியாவில் எந்த ஒரு தீவிரவாத நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும், முதலில் ஜமாவுக்கு அதில் தொடர்பிருக்கிறதா என்றுதான் புலனாய்வு அமைப்புகள் பார்க்கும். இல்லை என்று தெரிந்தால் மட்டுமே மற்றவர்களைக் கவனிப்பார்கள். அந்தளவுக்குப் பிராந்தியத்தின் ஏகபோக பயங்கரவாத இயக்கமாக, ஜமா இஸ்லாமியா உருவானது எப்படி என்பது மிகவும் விறுவிறுப்பான கதை.

1938 ஆகஸ்ட் 17-ம் தேதி ஜாவா தீவில் பிறந்தவரான அபூபக்கர் பஷீர், 1983-ல் இந்தோனேஷிய அதிபர் சுஹர்தோவால் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட காலம் வரைக்கும், தனது நோக்கத்துக்கும் செயல்பாடுகளுக்கும் எவ்வித இடையூறும் ஏற்பட்டுவிடாமல் சர்வஜாக்கிரதையாகத்தான் பார்த்துக்கொண்டு வந்தார். ஒரு சாராருக்கு அவர் ஒரு தீவிரவாத மனோபாவம் கொண்டவர் என்பது தெரியும். பெரும்பான்மை மக்களுக்கு பஷீர் ஒரு கல்வியாளர். ஏழை எளியவர்களுக்கு போர்டிங் பள்ளிக்கூடம் நடத்தும் நல்லவர். தவிரவும் அடித்தட்டு மக்களின் சட்ட ரீதியிலான பிரச்னைகளை எளிதில் தீர்த்து வைக்கும் பஞ்சாயத்துக்காரர். அவ்வளவுதான்.

இந்த வேஷத்தை அவரால் வெற்றிகரமாகப் பல ஆண்டுகள் போட்டுக்கொண்டு உலாவர முடிந்திருக்கிறது. பஷீர் கைதானபோது, இந்தோனேஷியர்கள் பலரால் அதை நம்பவே முடியவில்லை. 'அவரா அவரா' என்று வியப்பில் வாய் பிளந்து நின்றார்கள். உண்மையில் அவர் கைதானபோதுதான், இந்தோனேஷியாவில் அவரால் உருவாக்கப்பட்ட தீவிரவாதப் பயிர் அதுநாள் வரை எத்தனை செழித்து வளர்ந்திருக்கிறது என்கிற விவரமே தெரிய வந்தது.

கைதான பிறகும் கூட, இரண்டாண்டு காலம் வரை அவர் சிறையில் கண்ணியவானாக, சட்டரீதியில் வழக்கை எதிர்கொள்ளக்கூடியவராக மட்டுமே இருந்தார். திடீரென்று 1985-ல் பஷீர் தப்பிவிட்டார் என்கிற செய்தி வந்தபோதுதான், அத்தனை பேருக்கும் மூச்சு ஒரு கணம் நின்று இயங்கியது.

தப்பிவிட்டாரா? எப்படி?

சுஹர்தோ கேட்ட முதல் கேள்வி இதுதான். ஏனெனில், வழக்கமான கைதிகளுக்கு இருந்த காவலைக்காட்டிலும் பல மடங்கு அதிகமான காவல் பஷீருக்கு அளிக்கப்பட்டிருந்தது. அவர் குளிக்க, தொழப் போனால் கூட கூடவே இரண்டு சிறைக்காவலர்கள் ஆயுதம் தரித்து உடன் செல்வார்கள். கிட்டத்தட்ட ஆறு மாத காலம் பஷீர் சிறை இருந்த அறையின் வாசலிலேயே தினசரி இரண்டு காவலர்கள் நிறுத்தப்பட்டிருந்தார்கள். மற்ற கைதிகளின் அறைகளுக்கெல்லாம் எட்டடி உயரத்தில் ஒரு ஜன்னல் என்றால், பஷீர் இருந்த அறைக்கு மட்டும் பதினொரு அடி உயரத்தில் ஜன்னல். மற்ற கைதிகள் உலவ ஒரு நேரமென்றால், பஷீர் அறைக்கு வெளியே வந்து உலவ தனியொரு நேரம். உலவும்போது நான்கு காவலர்கள் அவருடனேயே நடந்தாக வேண்டும்.

அவர் நின்றால் அவர்களும் நிற்பார்கள். அவர் உட்கார்ந்தால் அவர்களும் உட்காருவார்கள். அவர் படுத்தால் அவர்களும் படுப்பார்கள்.

ஒரு சார்லி சாப்ளின் படம் பார்ப்பது போலத்தான் இருக்கும். பஷீர் சிறையில் இருந்த காலத்தில், மிகவும் நேர்த்தியாகவே நடந்துகொண்டார். காவலர்களிடம் மரியாதையாகவே பேசுவார். அவர்களது சொந்த சோகங்களுக்குச் செவி கொடுப்பார். தம்மால் அவர்களுக்கு உதவ முடியுமானால் தயங்காமல் சொல்லும்படி ஊக்குவிப்பார். இந்தோனேஷியாவின் போராளி இயக்கங்கள் குறித்து மட்டும் மூச்சுவிடமாட்டார். எவ்வகையிலாவது பேச்சு அந்தப் பக்கம் மாறுமானால், உடனே மௌன விரதம் மேற்கொண்டு விடுவார்.

இரண்டாண்டு காலத்தில் பஷீர் சிறை அதிகாரிகளின் நம்பிக்கைக்குரிய கைதி ஆகியிருந்தார். அவர் தப்பிச் செல்லக்கூடியவர் என்றே யாரும் எண்ணியிருக்கவில்லை. ஆனாலும், அவர் தப்பித்தது எப்படி என்பது இன்றுவரை புதிர்தான்.

ஒரு மருத்துவப் பரிசோதனைக்காக ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது தப்பிவிட்டார் என்று ஒரு சிலரும், தண்டனைக் காலம் முடிந்து வெளியேற வேண்டிய வேறு ஒரு கைதிக்குப் பதிலாக அவர் வெளியேறிவிட்டார் என்று வேறு சிலரும் தொடர்ந்து பலகாலம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

உண்மையில், பஷீர் தப்பித்த விவரத்தை இந்தோனேஷிய அரசாங்கம் மறைத்துவிட்டது. அல்லது அரசுக்கே அந்த விவரம் தெளிவாகத் தெரியவில்லை என்றுதான் கொள்ளவேண்டும். ஆறு சிறைக்காவலர்களுக்குப் பதவி பறிபோனது ஒன்றுதான் லாபம்.

சிறையிலிருந்து தப்பித்த பஷீர், மூன்று தினங்கள் ஜகார்த்தாவிலேயேதான் சுற்றிக் கொண்டிருந்திருக்கிறார். அப்படியும் கோட்டைவிட்டுவிட்டது காவல்துறை. அதன்பிறகு, அவர் ஒரு வர்த்தகக் கப்பலில் ஒளிந்து கொண்டு சுமத்ரா தீவுகளுக்குத் தப்பிச் சென்றார். சில மாதங்கள் சுமத்ராவில் சுற்றிக் கொண்டிருந்துவிட்டு, அங்கிருந்து மலேசியாவுக்கு வந்தார். பல காலம் தன்னுடைய அடையாளத்தை மறைத்துக்கொண்டு அமைதியாக இருந்தவர், மெல்ல மெல்ல வெளியே வரத் தொடங்கினார். மீண்டும் ஒரு கல்வியாளராக. மீண்டும் ஒரு பிரசாரகராக. மீண்டும் ஓர் ஆசிரியராக.

பஷீருக்கு தொடக்கம் முதலே கிராமப்புற மக்கள் மீதுதான் கவனம் குவிந்திருந்தது. அவர்களுக்குத்தான் அவர் அதிகம் கல்வி கற்றுக் கொடுத்தார். அவர்களுக்குத்தான் அவர் அரசியல் சொல்லிக் கொடுத்தார். அவர்களிடமிருந்துதான் தனது படைக்கு அவர் ஆள் திரட்டவும் தொடங்கினார்.

ரகசியமாகச் செயல்பட்டது போதும் என்று அவர் முடிவு செய்தது எண்பதுகளின் இறுதியில். அதிகாரபூர்வமாக ஜமா இஸ்லாமியா தொடங்கப்பட்டதும் அப்போதுதான்.

1980-ம் வருடம் தொடங்கி அடுத்த எட்டு, ஒன்பது ஆண்டு காலம் உலகம் முழுவதையும் ஒரு ஜுரம் பிடித்து ஆட்டியது நினைவிருக்கலாம். அமெரிக்க சோவியத் பனிப்போரின் உச்சகட்ட காலம் அது. ஆப்கனிஸ்தானை நிலைக்களனாகக் கொண்டு அமெரிக்காவும் சோவியத் யூனியனும் மோதிக்கொண்ட நேரம். உலகம் முழுவதிலுமிருந்து பல இஸ்லாமிய இளைஞர்கள், யாரும் அழைக்காமலேயே ஆப்கனின் விடுதலைக்காகத் தம்மால் இயன்ற பணியைச் செய்வதற்காக, காபூலையும் கராச்சியையும் நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள்.

அப்படிப் போன பலர், ஒசாமா பின்லேடனிடம் தஞ்சம் புகுந்தார்கள். சிலர் ஐ.எஸ்.ஐ.யிடம் அடைக்கலமானார்கள். இன்னும் சிலர் ஆப்கனின் பல்வேறு ஆதிவாசிப் படைகளுடன் ஐக்கியமானார்கள்.

ஏராளமான போராளிக் குழுக்கள் அங்கே இருந்தன. சிறியதும் பெரியதுமான குழுக்கள். தலைவர்களை மட்டுமே கொண்ட குழுக்கள். தொண்டர்கள் இருந்தும் சரியான தலைமை வாய்க்காத குழுக்கள். எல்லாம் இருந்தும் ஆயுத பலமில்லாத குழுக்கள்.

இந்தக் குழுக்களையெல்லாம் ஒருங்கிணைத்து, ஏதாவது உருப்படியாகச் செய்து ஆப்கனை சோவியத் யூனியன் பிடியிலிருந்து விடுவிக்க முடியுமா என்று பார்த்த மிகப்பெரும் தலைவர்கள் அடங்கிய ஒரு தனிக்குழு. அவர்களுக்கு உதவி செய்துகொண்டிருந்த சவூதி அரேபிய அரசாங்கத்தின் ரகசியக் குழு ஒன்று.

எல்லாவற்றுக்கும் மேலாக ஆப்கன் போராளிகளை வைத்து சோவியத்திடம் விளையாடத் திட்டம் தீட்டிக்கொண்டிருந்த சி.ஐ.ஏ. அவர்கள் ஒசாமா பின்லேடனை வளைக்கப் பார்த்தார்கள். 'ஆயுதம் வேண்டுமானால் ஆயுதம். பணம் வேண்டுமானால் பணம். என்ன கேட்டாலும் தருகிறேன், யுத்தத்தில் ஆப்கானியர்கள் ஜெயிக்கவேண்டும்' என்று தேசிய உணர்வைத் தூண்டிவிட்டு, குளிர்காயப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். உலகமெங்கிலுமிருந்தும் ஆப்கனுக்கு வந்து குவிந்த இளைஞர்களை, அப்போது ஒசாமா பின்லேடனும் அவரது ஞானத் தந்தை போல் செயலாற்றிக் கொண்டிருந்த அப்துல்லா அஸம் என்கிற மார்க்க அறிஞரும் வசீகரித்துக் கொண்டிருந்தார்கள். ஒசாமாவுக்கு அப்போது போராளி இமேஜ் கிடையாது. சவூதியைச் சேர்ந்த பணக்கார வாலிபர் என்கிற இமேஜ்தான். அப்துல்லா அஸம், பேர் பெற்ற போராளி. பாலஸ்தீனில் யாசிர் அராஃபத்துடன் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருந்தவர். என்னவோ சொந்தத் தகராறில் உறவை முறித்துக்கொண்டு, தனது சேவையை ஆப்கனுக்கு வழங்குவதற்காக பாகிஸ்தானில் வந்து முகாமிட்டிருந்தார்.

இந்த இருவரும் இணைந்து செயலாற்றிக்கொண்டிருந்த வேகத்தையும் திட்டமிடலையும் பார்த்த சர்வதேச முஸ்லிம் இளைஞர்களில் பலர், தேடி வந்து இவர்களிடம் அடைக்கலமானார்கள்.

அப்படி வந்தவர்களுள் இந்தோனேஷிய முஸ்லிம் இளைஞர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகம்.

கிட்டத்தட்ட இருநூறு பேர் அப்போது இந்தோனேஷியாவிலிருந்து பாகிஸ்தான் வந்து, அப்துல்லா அஸமின் நிழலில் போர்ப்பயிற்சி பெற்று, ஆப்கன் யுத்தத்தில் பங்கு கொண்டதை அங்கே மலேசியாவில் உட்கார்ந்து கொண்டு பஷீர் பார்த்துக் கொண்டிருந்தார்.

இந்தோனேஷியாவில் தாம் செய்ய உத்தேசித்திருந்த காரியத்துக்கு அந்த இளைஞர்கள்தான் சரி என்று அவருக்குத் தோன்றியது. ஆர்வமும் துடிப்பும் மிக்க இளைஞர்கள். யாரோ புண்ணியத்தில் இப்போது போர்ப் பயிற்சியும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். யுத்தம் முடிவதற்குள் போர்க்கலையில் மிகவும் முன்னேறிவிடக் கூடியவர்கள். யுத்தம் முடிந்து ஊருக்குத் திரும்புகிறவர்களுக்கு நாம் வேலை கொடுத்தால் என்ன?

இதுதான் யோசனை. இதுதான் செயல்திட்டம். பஷீர் தனக்கு நெருக்கமான நண்பர்களுடன் இந்த விஷயம் குறித்து பல வார காலம் மிகத் தீவிரமான ஆலோசனைகளை நடத்தினார். பிறகு நம்பகமான, ஓரளவு போர்ப்பயிற்சி பெற்ற இந்தோனேஷியக் குழு ஒன்றைத் தயாரித்து, தேர்ந்தெடுத்து, தம் சார்பில் ஆப்கனுக்கு அனுப்பி வைத்தார். கட்டளைகள் மூன்று.

முதலாவது, அவர்கள் ஆப்கன் யுத்தத்தில் பங்கு பெற வேண்டும். ஒசாமா பின்லேடன் மற்றும் அப்துல்லா அஸமின் நம்பிக்கைக்குரிய படைப்பிரிவாக அறியப்படும் அளவுக்குத் திறமை காட்ட வேண்டும்.

இரண்டாவது, ஆப்கனில் போரிட்டுக் கொண்டிருக்கும் இந்தோனேஷிய இளைஞர்களை ஒருங்கிணைத்து, போருக்குப் பின் அவர்கள் இந்தோனேஷியாவுக்குத் திரும்பி வரும்போது அடைக்கலம் புகுவதற்கு, ஜமா இஸ்லாமியா தன் கதவுகளைத் திறந்து வைத்திருக்கிறது என்பதை

எடுத்துச் சொல்ல வேண்டும். இயக்கத்தின் நோக்கம், அருமை பெருமைகள் அனைத்தையும் அவர்களுக்குப் புரியும் விதத்தில் எடுத்துச் சொல்லவேண்டும்.

மூன்றாவது, யுத்தத்தின் முடிவு எப்படியானாலும் அந்த இளைஞர்கள் மனச்சோர்வு அடையாத வண்ணம் அவர்களை அடைகாக்க வேண்டும். எப்போதும் ஊக்குவித்து, தட்டிக் கொடுத்து, உற்சாகப்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும். அவர்களது பயணம், ஜமா இஸ்லாமியாவை நோக்கியதுதான் என்பதையும், ஆப்கன் யுத்தம் ஒரு வாசல்படி மட்டுமே என்பதையும் எப்போதும் நினைவூட்டிக் கொண்டே இருக்கவேண்டும்.

இந்தக் கட்டளைகளைச் சுமந்துகொண்டு ஆப்கனுக்குப் புறப்பட்டுப் போனது பஷீரின் படை.

பெரிய கஷ்டம் ஏதுமில்லை அவர்களுக்கு. யுத்த காலத்தில் அப்போது ஆப்கன் - பாகிஸ்தான் எல்லை என்பது சுங்குவார் சத்திரம் மாதிரிதான் இருந்தது. விசா, பாஸ்போர்ட் கெடுபிடிகள் எதுவும் மருந்துக்கும் கிடையாது. யாரும் எப்போது வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் போய்வரலாம். அவசியம் இருந்தால், பாகிஸ்தான் அரசே அவர்கள் இருபுறமும் போய்வர உதவி செய்யும். பணம் கொடுக்கும். ஆயுதம் கொடுக்கும். எதுவும் கொடுக்கும். யுத்தத்தில் இறுதி வெற்றி ஆப்கனுடையதாக இருக்கவேண்டும். கடவுள் நம்பிக்கையற்ற, கம்யூனிஸ்டுகளான சோவியத்துகள் மண் கவ்வித் திரும்பினால் போதும்.

அது ஒரு விதமான மன நிலை. நம்ப முடியாத அளவுக்கு சர்வதேச முஸ்லிம் சமூகத்தின் அடியாழம் வரை ஊடுருவியிருந்தது. ஆப்கானியர்கள் பட்ட கஷ்டம் கொஞ்சமில்லைதான். விடுதலைக்காகத் தவித்துக் கொண்டிருந்தவர்களுக்கு உதவி செய்ய நினைத்ததில் தவறும் இல்லை. ஆனாலும், அன்றைய பாகிஸ்தான் அரசும் சரி, அமெரிக்க உளவுத்துறையும் சரி. ஆப்கன் யுத்தத்தை முன்வைத்து தம் சொந்த நலனுக்குச் செய்துகொள்ள நினைத்த காரியங்கள் அநேகம். இந்தத் தொடருக்குச் சம்பந்தமில்லாத விஷயங்கள். சந்தர்ப்பம் கிடைத்தால் வேறொரு சமயம் பார்க்கலாம்.

மேற்படி இந்தோனேஷியக் குழு ஆப்கனுக்கு வந்து திட்டமிட்டபடி, இந்தோனேஷிய இளைஞர்களை அடையாளம் கண்டு பேச்சு கொடுக்கத் தொடங்கியது. மிகச் சீக்கிரத்தில் அவர்களுடைய நம்பிக்கையையும் அவர்களால் பெற முடிந்தது. யுத்தம் முடிந்தபோது, பல தேசத்து இளைஞர்கள் தம் சொந்தச் செலவில் ஊர் திரும்பவேண்டிய நிலையில் (சிலர் ஒசாமாவுடனும் சிலர் வேறு சில குழுக்களுடனும் இணைந்தது போக.) இந்தோனேஷிய இளைஞர்களை மட்டும் நயா பைசா செலவின்றி ஊருக்கு அழைத்துப்போகும் பொறுப்பை பஷீர் அனுப்பிய பிரத்தியேகக் குழு ஏற்றுக்கொண்டது.

அப்படிச் சென்ற இளைஞர்கள்தாம் ஜமா இஸ்லாமியாவின் தூண்களாகப் பின்னாளில் ஆனார்கள். அவர்களில் ஒருவர்தான் ஹம்ப் அலி என்கிற ரிதுவன் இஸாமுத்தீன்.